# திராவிடர் இயக்கத்தை அழிக்கச் சதி

Regd: No. M. 5458 Phone: No. 4502
விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)
ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

| மாலை 2 | சென்னை 6—12—50 | மணி 5 |
|---|---|---|

## அடக்குமுறை
## பலிக்காமற்போனதன் பலன்

—(o)—

## ஒரு மாதத்தில் இருந்த இடம் தெரியாமலாக்கும் சதித் திட்டம்

—(o)—

## இழி செயல்களை மேற்கொள்ள தேசபக்தர்கள் துணைவு

திராவிடர் இயக்கம் நாட்டு மக்களிடையே நாளுக்கு நா செல்வாக்குப் பெற்றுவருகிறது. மக்கள் திராவிட இயக்கத் வர் கூறுபவைகள் உண்மையானவை என்பதை அறிந்து, திரள்திர ளாகத் திராவிட இயக்கத் தலைவர்கள் பேசும் கூட்டங்களில் வந்து கூடுகின்றனர்.

இந்நிலை காங்கிரஸ்காரர்கள் மனத்தில் பொறுமைக் கன எழுப்பியது. தேர்தல் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது; காங் கிரஸ் ஆட்சி முறைச் சீர்கேட்டினை மக்கள் நன்குணரத் தொடங்கி விட்டனர்; காங்கிரஸ்காரர்களுக்கிடை பதவி மோகம் தலை தூக்கி நின்று அதனால் ஊழல்கள் மலிந்து விட்டதைக் காங்கிரஸ்காரர் களே கூறுவதிலிருந்து மக்கள் மனக் கண் திறந்துவிட்டது. காங் கிரஸ் ஆட்சித் திட்டங்கள் வெற்றி பெறாமல் நாடு சீர்குலைவதைக் காங்கிரஸ்காரர்களே எடுத்துக் கூறுவதிலிருந்து மக்கள் நன்கறிந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் அடக்கு முறையைக் கையாளுவதன் மூலமாக வும், வெள்ளையர்கள் செய்த பிரித்துவைத்தல், வம்புக்கிழுத்து பழி சுமத்துதல், பொய்ப் பழிகளைச் சுமத்தித்திரிதல் முதலியவற்றின் மூலமாகவும் திராவிடரியக்கத்தை நசுக்க ஒரு சதித் திட்டம் தயா ரித்திருப்பதாக அறிகிறோம்.

திராவிட இயக்க வளர்ச்சியைக் குலைக்கவும், அதனை அடியோடு அழிக்கவும் வழிகள் வகுக்க வென்று, 3-12-50 ஞாயிற்றுக் கிழமையன்று மாலை 6 மணிக்கு, சென்னை, ஜார்ஜ்டவுன் கந்தசாமி கோவிலுக்கு முன்னால் உள்ள மண் டபத்தில், திராவிடர் இயக்க எதிர் பிரசாரக் கமிட்டியின் கூட்டம் ஒன்று இரகசியமாய் நடந்தது என் றும், இக்கூட்டத்துக்குப் பல காங் கிரஸ் தலைவர்களும், திராவிடரை எதிர்ப்பதற்கென வாடகைக்கு வர வழைக்கப்பட்டவர்கள், இரவல வரவழைக்கப்பட்டவர்களாகி ரும், சென்னை நகரசபைக் கவு சிலர்கள் பலரும் வந்திருந்தன என்றும் அறியக்கிடக்கிறது.

இந்த இரகசியச் சதியாலோசனை

(4-ம் பக்கம் பார்க்க)

# மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத் திறமை

—(o)—

## அரிசி உண்போருக்குக் கோதுமை

—(o)—

## கோதுமை உண்போருக்கு அரிசி!

சென்னை மாகாணத்திலுள்ள அரிசி உண்போருக்குக் கோதுமை யும், கிழக்குப் பஞ்சாப் மாகாணத் திலுள்ள கோதுமை உண்போருக்கு அரிசியும் கட்டாயமாகத் தரப்படு வதாக டில்லி வட்டாரத்தில் பலத்த வதந்தி பரவியிருக்கிறது. இது உண்மையா? என்று ஒரு தோழர் பார்லிமெண்டில் கேள்வி கேட்ட போது "கட்டாயமாகத் தரப்படுவ தில்லை" என்று தோழர் முன்ஷி கூறிவிட்டார். ஆனால் கோதுமை வாங்காவிடில் அதற்குரிய அரிசி கொடுக்கப்படாமல், கோதுமையு மில்லாமல் போய்விடுகிறதென்ப தையும், அதனால் வேறு விதியில் லாமல், நாம் கோதுமையை வாங்கி வயிற்றை நிரப்பிவைக்கவேண்டி யிருக்க வேண்டியிருப்பதையும், இந்த வகையில் இது கட்டாய மாக்கப்படும் செயலாகவே இருக் கிறதென்பதையும், நாம் நன்கு அறிந்தேயிருக்கிறோம் அல்லவா! கனம் முன்ஷி சட்டசபையில் கூறி யிருப்பதிலிருந்து, கிழக்குப் பஞ் சாப் விஷயமும் நன்கு விளங்குகிற தல்லவா?

மழையின்மை பஞ்சத்திற்கு ஒரு காரணம் என்றால், நிர்வாக ஊழல் மிகப் பெருங் காரணமாயிருக்கிற தென்பது நன்கு புரிகிறதல்லவா? உணவுப் பஞ்சம், நூல் பஞ்சம் முதலியவை நம் நாட்டில் ஏற்படு வதற்கு இத்தகைய நிர்வாக ஊழலே முக்கியக் காரணம் என் பதை எவரேனும் மறுக்கமுடியுமா!

### மேற்கு நாடுகளுக்கு இங்கு தளம் கிடையாது

லண்டன், டிச. 5—

அமைதியான காலத்தில் மேற்கு நாடுகள் இங்கு தளம் எதையும் வைத்துக்கொள்வதை அனுமதிக்க முடியாது என்று எகிப்து சொல் வதை அட்லாண்டிக் நாடுகள் தவ றான போக்கு என்று சொல்கின் றன.

எகிப்தின் இக்கொள்கை விஷய மாக வாஷிங்டனில் ட்ரூமனுடன் ஆட்லி பேசுவார் என்று கூறப் படுகிறது.

### மலேயாவில் இந்திய கான்ஸ்டபிள்கொல்லபட்டார்

குலாலம்பூர், டிச. 5—

இங்கு எஸ்டேட் மானேஜர் கிளார்க்ஸன் என்பவரும் ஒரு இந் திய கான்ஸ்டபிளும் கலகக்காரர் களால் சுட்டுக்கொல்லப்பட்டிருக் கின்றனர்.

# வடநாட்டார் கள்ளச் சந்தையினரானாலும் வெளியிற் சொல்லாதே

—(o)—

## தென்னாடு சுரண்டப்பட்டாலும் வடநாட்டாரைப் பழிக்காதே

—(:0:)—

## பழித்தால் சும்மா விடமாட்டோம்

### பக்தவத்சலனார் மிரட்டுகிறார்

தென்காசி நகர காங்கிரஸ் ஆதர வில் அமைச்சர் பக்தவத்சலனார் பேசினார். என்ன பேசினார். பொது மக்களுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவையும் காங்கிரஸ் அரசாங்கம் செய்யக் காத்துக்கொண்டிருப்பதாகக் கூறி னார். அர[illegible]வி ஏறி, ஆறு ஆண் டுகளில், [illegible]விச் சண்டையைத் தவிர, கட்சித் தலைவர் போட்டா போட்டியைத் தவிர, மந்திரி சபை கள் மாற்றியமைக்கப்படுவது தவிர, இவர்கள் மக்களுக்குச் செய்து விட்ட நன்மை என்னவென்பதை மக்கள்தாம் அறியவேண்டும். பட் டினி, பசி, வறுமை, பிணி-இவை நாட்டிலே தாராளமாக மக்களிடை நடமாடுகின்றன என்பது வெ ளிடை மலையாக விளங்குகிறது.

அரசாங்க இலாக்காக்கள் ஒரே ஊழல் மயமாக மாறிப்போ யிருப்பது தெளிவாக விளங்கு கிறது. 16 அவுன்ஸ் அரிசி ரேஷ 12 அவுன்ஸாகி, 8 அவுன்சாகி 6 அவுன்சாக வளர்ந்த நன்மை மி மிகத் தெளிவாகத் தெரிகிறத இன்னும் என்னென்ன நன்மை களைத்தான் நமக்கு அரசாங்க செய்யப்போகிறதோ!

திராவிடர் இயக்கத்தைய தோழர் பக்தவத்சலனார் சும்மாவிட வில்லை. "திராவிடர்களே இதே பாருங்கள்! வடநாடு தென்னாடு என்று பேசாதீர்கள். வடநாட்ட வர் நம்நாட்டில் கள்ளச்சந்தை நடத்தினால், நம் மக்களைச் சுரண்டி னால் என்ன குடிமுழுகிவிடும். அ கள் நம்நாட்டவரல்லவா? அ யர்களா? எனவே, வடநா

2-ம் பக்கம் பார்க்க

# மாலைமணி

சென்னை 6—12—50 புதன்கிழமை


## ...காங்கிரஸின் :: சர்வாதிகார வெறி

### (1)

திராவிட இயக்கத்தினருக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற் ...ன்று, எதிர்ப் பிரசாரக் குழுவைக் காங்கிரஸ்காரர்கள் ஆங் ...ங்கே ஏற்படுத்தி வருகின்றனர். சென்னையிலே வட்டாரத்துக் ...கான்று வீதம் இக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நாடு ...ரிமை பெற்றபின் காங்கிரஸ் சபைக்கு வேலையில்லை. ஆங்காங்கே ...ற்பட்டிருந்த கிளைச் சபைகள்; எந்த வேலையுமின்றி உறங்கிக் ...க்கவும், லைசென்ஸ் வாங்கித்தருவதாகவும், சட்டசபை அங்கத் ...னர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் சிபார்ஸை, தயவைப் பெற் ...றுத் தருவதாகவும் கூறி அவற்றை வேண்டுபவர்களிடம் ஏதோ ...பெற்றுக்கொண்டு அவ்வேலையில் இறங்கியிருந்தனர்.

இப்போது இவ்வாறு சோம்பிக் கிடந்தவர்களுக்கு ஒரு நல்ல ...வலை கிடைத்து விட்டது. பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டி ...க்கிறது. எத்தனை நாளைக்குப் பொதுத் தேர்தலை ஒத்திப்போட்டு வந்து பொது மக்களை ஏமாற்றினாலும் ஒரு நாளைக்கு அதனை நடத் ...யே தீர வேண்டும். நாட்டின் நிலையோ, காங்கிரஸ்காரர்களின் ...ழல்கள் அனைத்தையும் மக்கள் புரிந்து கொள்ளும் நிலைக்கு வந்து ...ட்டது, மக்கள் முன்னேற்றத்திலும் கட்டுப்பாட்டிலும் உயர்வி ...ும் அக்கரை கொண்ட திராவிட இயக்கத்தவர்கள் காங்கிரஸ்காரர் ...ள் தேச பக்திப் போர்வையின் கீழ் நம் நாட்டு மக்களுக்குத் ...ரோகமாகச் செய்யும் வேலைகளையும், ஆட்சியாளர், வடநாட்டுக்கு ...டிமைகளாகி நம் மக்களின் நலன்களைப் பலியிட்டு வருவதையும் ...றமையற்ற முறையில் ஆட்சி நடத்தி மக்களைப் பட்டினியிலும், ...றுமையிலும் வாடச் செய்து வருவதையும் இலஞ்ச ஊழல்களை ...ும் அப்போதைக்கப்போது வெளிப்படுத்திக்கொண்டு வருகின்ற ...ர். எனவே, நாடெங்கும் காங்கிரஸ்காரர்களின் உண்மையான ...ரூபம்" என்னவென்பது மிகத் தெளிவாக மக்கள் அறிந்து ...ளும் நிலைமை ஏற்பட்டுவிட்டது,

மேலும் திராவிட இயக்கத்தவர் வட நாட்டாரின் ஆதிக்கமோ, ...ண்டலோ, கள்ளச் சந்தை வாணிகமோ, நம் நாட்டில் கூடா ...தென்றுகூறி, வட நாட்டுச் சுரண்டலை வன்மையாகக் கண்டித்த ...ிர்த்து வருவதை யறிந்த வட நாட்டவர் திராவிட இயக்கத்தவர் ...பாக்கைத் தடை செய்ய எவ்வளவு பணம் செலவானாலும் தயார் ...னும் நிலையில் இருக்கின்றனர். இந்து மகா சபை, ஆரிய சமா ...ம் எனும் முனை மழுங்கிய ஆயுதங்களைக் கொண்டு ஒன்றும் ...செய்ய முடியாதென்பதை நன்கு உணர்ந்துகொண்ட வட நாட்ட ... மக்களை ஏமாற்றக் காங்கிரஸ்காரர்களே தக்கவர்கள் எனத் ...ர்ந்தெடுத்துப் பணச் செலவிட முனைந்தனர். இந்நிலையில், வரப் ...ாகும் பொதுத் தேர்தலுக்குள், தங்களைப்பற்றி மக்கள் மனத் ...ில் நல்லெண்ணம் உண்டாகுமாறு பொய்ப் பிரசாரம் செய்ய ...வண்டுமென்று எண்ணியிருந்த காங்கிரஸ் பக்தர்களுக்கு வட ...ட்டாரின் ஆதரவும் கிடைக்கவே, பழம் நழுவிப் பாலில் விழுந் ... போன்று, நல்ல பண உதவியுடன் தங்கள் வேலை நன்கு நடை ...ற வாய்ப்புக் கிடைத்ததுபற்றிக் காங்கிரஸ் தோழர்கள் மிகுந்த ...ழ்ச்சி கொண்டு, போட்டி போட்டுக்கொண்டு பேட்டைக்கொன் ...ண்டு திராவிட எதிர்ப்புச் சபைகளைக்கூட ஏற்படுத்தத் ...ாடங்கிவிட்டனர்.

தேர்தல் பிரசாரம் செய்ய வேண்டுமானல் தங்கள் வேலைத் ...ட்டத்தைப்பற்றி இனிக் காங்கிரஸ்காரர்கள் மக்களிடம் எதுவும் ... முடியாது. ஏனெனில் இவர்களுடைய வேலைத் திட்டங்கள் ...வளவு அருமையானவை என்பதைப் பொது மக்கள் இந்த ...று வருட காலத்தில் நன்கு அறிந்துகொண்டுவிட்டனர். எனவே, ...ங்கிரஸ்காரர்களின் தேர்தல் பிரசாரமென்பது, காங்கிரஸுக்கு ...ிராக உள்ள கட்சிகளை வாயில் வந்தவாறு திட்டி, பொய்ப் பழி ...ச் சுமத்தி, புளுகுப் பிரசாரம் செய்வதுதான். அப்படிப் புளுகுப் ...சாரம் செய்வதற்கு வசதியாக இப்போது மற்றொரு முனையிலி ...ந்து பணமும் கிடைக்கிறதென்றால், வெறும் வாய்க்கு அவல் ...ந்தது போல்தானே!

...ங்கிரஸ்காரர்களுடைய இந்த எதிர்ப்பு முயற்சியை நாம் ... வரவேற்கிறோம்—ஒழுங்கு மீறாத நிலையில் இருந்தால். ... திராவிட இயக்கத்தவரின் முயற்சிகள், தொண்டுகள் நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தவையல்ல வென்பதை நேர்மையான முறையில், தக்க ஆதாரங்களுடன் மறுத்துரைப்பதென்றால் அதனை நாம் முழு மனத்துடன் வரவேற்கின்றோம். இவ்வாறு ஓர் எதிர்ப்பு இருக்கத்தான் வேண்டுமென்றும் கருதுகிறோம். இப்படி எதிர்ப்பு மிருந்தால்தான், பொது மக்கள் எது உண்மை எது பொய் என்பதை எளிதில் தெரிந்து கொள்வதற்கு ;வசதியாயிருக்கும்.

ஆனால், எதிர்ப்புக் காட்டுவதைநேர்மையும் ஒழுங்கும் தவறிய முறையில் வைத்துக் கொண்டால், சதித் திட்டங்களைக் கையாள முயல்வதென்றால், வம்புக்கிழுத்துப்பொய்ப் பழிகளைச்சுமத்தி, அதிகாரவெறிகொண்டு, ஆணவத்தால் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதென்றால், சுய நலங்கொண்டு எதிர்க்கட்சிகளே இல்லாதபடி ஒழித்துவிட வேண்டுமென்னும் சர்வாதிகார வெறி கொண்டால், உண்மையில் நாட்டிலே அமைதியின்மையும் குழப்பமும் தவிர வேறென்ன ஏற்பட முடியும்! நேர்மை எனப்படுமா?

இன்று நமக்குக் கிடைத்துள்ள செய்தி ஒன்றில் பிரபல காங்கிரஸ்காரர்கள் சேர்ந்து, திராவிடர் இயக்கத்தை ஒழிப்பதற்கு ஒரு சதித் திட்டம் வகுத்திருப்பதாகத் தெரிகிறது. அச் செய்தியை மற்றொரு பகுதியில் வெளியிட்டுள்ளோம். அதிற் காணப்படும் விவரங்கள் உண்மையாயின், சிங்கத்தின் குகையிலே சுண்டெலிகளை விளையாடவிடும் தவற்றை ...ங்கிரஸ்காரர்கள் செய்கின்றார்கள் என்றே கூறுவோம். அத் திட்ட...ததின் ஒவ்வொரு பகுதியையும் நாளைமுதல் விளக்கிவருவோம்.

---

## ஆற்காட்டில் அறப்போர்!

## இராவண காவியம் தடை மீறப்பட்டது

—:o:—

3-12-50 ஞாயிற்றுக்கிழமை பகல் 10-மணிக்கு பெரியார் மைதானத்தில் மாபெரும் மக்கள் கூட்டத்தில் தோழர் மணி எழிலன், ஆட்சியாளரால் தடை செய்யப்பட்ட "இராவண காவியம்" என்னும் நூலை படித்தார். அச்சமயம் கூட்டத்தில் இருந்த சப் இன்ஸ்பெக்டர் புத்தகத்தை தோழர் மணி எழிலன் கையிலிருந்த புத்தகத்தை பறிமுதல் செய்தார். ஆனல் அப்புத்தக அட்டைமட்டும் இராவண காவியம் உள்ளே பகவத் கீதை. பறிமுதல் செய்த போலீஸ் அதிகாரி வெட்கி தலை குனிந்தார். பின்னர் தோழர் மணி எழிலன் பேசிய பிறகு கூட்டம் கலைந்தது.

---

## வட நாட்டார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்கவேண்டாம். விட்டுவிடுங்கள். அத்து மீறிப்பேசினல், மூக்கறுத்துவிட மாட்டேன்; கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்குவேன்" என்று மிரட்டுகிறார்.

இவர் மிரட்டல் உளுத்துப்போன மிரட்டலே, திராவிடர் இயக்கத்திற்குத் தடையுத்தரவுகள் 144கள், 153கள், 295கள், 183கள் என எத்தனைச் சட்ட விதிகள் கிளம்பின! தடியடிகள் எவ்வளவு! துப்பாக்கிப் பிரயோகம் என்ன! சிறைவாசமென்ன எல்லாம் கனம் பக்தவத்சலனரே செய்தாகிவிட்டதே. இவற்றையெல்லாம் திராவிடர்கள் அனுபவித்து நெஞ்சுரம் பூண்டுவிட்டனரே; குற்றத்தைக் குற்றம் என்று கூறும் பண்பு வாய்ந்த திராவிடர், சூழ்ச்சிக்கு, துரோகத்துக்கு உடந்தையாயிருக்க முடியாதே. சூழ்ச்சியையும் சுரண்டலையும் எடுத்துக் கூறுவது கடும் நடவடிக்கைக்குள்ளாகும் குற்றம் என்னில், அவ்வுண்மை நெறியைவிட்டுக் கொடுக்க திராவிடர் பண்பு இடமளிக்காதே வீண் மிரட்டல் வேண்டாம் தோழரே! ஊழலைக் குறைக்க கள்ளச்சந்தையைப் போக்க, வறுமையை அகற்ற, படடினிச் சாவுகள் ஏற்படாதிருக்க வேலை செய்வதில் கவனம் செலுத்தும் தோழரே குற்றச்சாட்டுகள் தாமாகக் குறைந்துவிடும். வீண் மிரட்டல் கண்டு அஞ்சுவோர் இந்தக் காலத்தில் எவருளர்.

---

## ஆஸ்திரேலியாவின் யுத்த முஸ்தீபு

கான்பொரா, டிச. 5—

ஆஸ்திரேலியாவில் மும்முரமாக யுத்த முஸ்தீபுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக ஆகும் செலவுகளை சமாளிக்க வரி ஒரு சிறிது உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

விமானங்கள் கப்பல்கள் இவைகளை பெருக்கவும் ஆயுத உற்பத்திகளை பெருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வியில் தொழிற்சாலைகள் எந்நேரத்திலும் யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலையாக மாறலாமாம். புது விமான நிலையங்களும் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

---

லண்டன், டிச. 5—

ஜார்ஜ் பெர்னாட்ஷா வசித்து காலமான இடமான ஹெர்ட்போர்ட்ஷயரில் அவர் பெயரில் ஒரு தியேட்டர் கட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

புதிதாக நிர்மாணிக்கப்படும் வெல்வின் டவுனில் இத்தியேட்டர் ஏற்படுத்தப்படும்.

# எப்படி நம்புவதோ?

நாம், கடவுள்களை நிந்திக்கும் கயவர்கள், மதத்தைக் குறை கூறுகிறோம் கண்டிக்கிறோம், என்று உண்மையிலேயே உள்ளம் வருந்தும் அன்பர்கள் சில பேர் இருக்கிறார்கள்—வேறு பலர் உளர்—ஏதாவது சாக்குக் காட்டி நம்மைத் தூற்றுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள் அவர்களைக் குறித்தல்ல நாம் குறிப்பிடுவது. உண்மையாகவே மனம் வருந்துகிறார்களே அவர்களுக்குக் கூறுகிறோம்-நமது கடவுள்களைப்பற்றியும் மதத்தின் போராலும் கட்டப்பட்டுள்ள கற்பனைக் கதைகள். படித்துவிட்டுச் சற்றே சிந்திக்கும் எவருக்கும், அருவருப்பைத் தானே கிளறுவதாக இருக்கிறது-அறிவுக்குப் பொருந்தாத ஆபாசங்களை அல்லவா ஆண்டவனின் பெயருடன் இணைத்து இங்கே, மத நூற்களாக்கி விட்டனர். மக்களின் பொது அறிவு வளர்ந்து, ஆராயுந்திறன் வளரும்போது, எப்படி அந்தக் கதைகளைப் பக்தியுடன் படிக்கவோ, நம்பவோ முடியும்!-இந்நிலையில், உலகமோ வேகமாக முன்னேறுகிறது—நாம் இந்த நாளிலேயும் அந்தப் பழய, நம்ப முடியாத, ஆபாசமான கதைகளை நம்பத்தான் வேண்டும்; அதுதான் மதவாதி என்பதற்கு இலட்சணம் என்று கூறினால், யாரால் சகித்துக்கொள்ள முடியும்? சில எடுத்துக் காட்டுகள்—இவை, நமது பெரியவர்கள் உச்சிமேல் வைத்துப்போற்றும் உயர்தரமான மத ஏடுகளிலே, கடவுள் திருவிளையாடல்களின் தொகுப்பாக உள்ள புராணங்களிலே காணப்படுபவை. இவைகளை எப்படி நம்புவது? நம்ப முடியுமா என்பதைக் கோபதாபமின்றி அன்பர்கள், கூறவேண்டும்.

1. சிங்காரச்சோலையில் சிலமுனிவர்கள் அனைத்தும் துறந்து ஆண்டவனை அடைய அல்லும் பகலும் தவம் செய்துகொண்டிருக்க, அங்கொரு பெண் மான் துள்ளி விளையாட, அதைக்கண்ட முனிவர்கள் அதன் மேல் ஆசைகொள்ள, அது உடனே கருவுயிர்த்து ஒரு பெண் குழந்தையை வள்ளிக்கிடங்கில் ஈன்று விட்டுச் சென்றுவிட்டது.

2. ஐந்நூறு யோசனை அகன்று நூறு யோசனை உயர்ந்த மரத்தைப் பிடுங்கி அவுணர்கள்மேல் வீசி எறிந்தார் வீரவாகு.

3. ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகால்களையுமுடைய சிங்கமுகாசூரன் எதிரிகளைக் கையில் எடுத்து விழுங்கினான்.

4. வாளுக்கிரையான சூரபன்மன் அண்டமுகட்டைத் தொடும்படியாக உயர்ந்து பூமி உருக்கொண்டு எங்கும் நிறைந்து நின்றான். முருகன் 7 பாணங்களை எய்ய அவை 7 கடல்களாகச் சென்று அழிந்தன.

5. சிங்கமுகாசூரனுடைய வயிற்றை சுப்ரமண்யரின் அம்பு துளைக்க அதன் வழியாக லட்சம் வீரர்கள் தோன்றினார்கள்.

6. சூரபன்மன் வேலன் படைக்கஞ்சிக் கடலின் மத்தியில் அண்டகூடமளவும் உயர்ந்து லட்சம் யோசனை அகன்ற மாமரமாக நின்றான்.

7. தாரகன் லட்சம் வீரர்களைப் புழைக்கையால் பிடித்துக் கட்டிக் கடலில் எறிந்தான்.

8. வீரவாகு சாந்தமதன பர்வத்தின்மேல் ஏறி நிற்க, அது அவரைத் தாங்காது பிளந்து பூமியில் ஆழ்ந்தது.

9. (அ) சூரபன்மனது தெற்கு வாயல், வாயல் காப்போனாகிய கயமுகன் ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கைகால்களையு முடையவன்.

(ஆ) கயமுகன் தன் மூவாயிரம் கைகளால் வீரவாகுவை எடுத்து விழுங்க எத்தனிக்க அவைகளைத் துண்டித்தார் வீரவாகு.

10. கயமுகன் ஆயிரம் குன்றுகளை எறிய அவைகள் வீரவாகுவின் மேல் பட்டவுடன் கல்லின் மேல் பட்ட பாண்டமாகுதல்.

11. கயமுகன் மலையைப் பெயர்த்து வீரவாகுவின் மேல் எறிய அதை வீரவாகு தோளில் தாங்க அவை மண்கட்டிபோல் உதிர்தல்.

12. தேவர்களும், அவுணர்களும் அமுதம் கடையும்போது மகாவிஷ்ணு மோகினியாக வர, ஈஸ்வரன் சுந்தர புருஷனாகவர, மோகினி அவர் பேரில் ஆசை கொள்ள அக்கணமே ஐயனார் தோன்றினர்.

13. அஷ்டகுல பர்வதங்களை ஓரிடத்தில் கூட்டுவது அவைகளைத் தலை கீழாய் நட்டு வைத்தல், கடல்களை ஒன்றாக்குதல் மேரு மலையை சமுத்திரத்தில் ஆழ்த்துதல், பெருகி வரும் கங்கையை அடைத்தல், நாகங்களை நேராக உருட்டல், சூரிய சந்திர நக்ஷத்திரங்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டு மகிழ்தல் இவ்வளவும் பாலமுருகனது பால்ய லீலைகள்.

14. சூரபன்மன் தேவர்களையும், வருஷம், மாதம், நாழிகை, நக்ஷத்திரம், நாள், சூரிய சந்திரன் முதலியவர்களையும் சிறை செய்தான்.

15. உமாதேவி காற் சிலம்பில் 9 முத்துகள் உதிர அவைகள் உமாவாக மாற உமா கண்டு கோபமடைந்து அவர்களைச் சபிக்க. சாபத்திற்கு அஞ்சிய அவர்களின் உடம்பில் வியர்வை உண்டாக வியர்வையினின்றும் லக்ஷம் வீரர்கள் தோன்றினார்கள்.

16. ஷி நவ உருவங்களின் தொப்புள் வழியாக வீரவாகு முதலிய நவ வீரர்கள் வாலிபப் பருவத்தினராய்த் தோன்றினார்கள்.

17. இந்திரன் புதல்வன், பானுகோபன், கூரையின் வழியாக சூரிய கிரணம் பட்டமையால் சூரியனைப் பிடித்து வந்தான். பிறகு கட்டில் காலில் கட்டிவைத்தான்.

## மேட்டுப்பாளையம், திராவிட முன்னேற்றக் கழகம்

30—11—50 வியாழக்கிழமை இரவு 8-30 மணிக்கு தோழர் ப. வை. சத்தியப்பன் இல்லத்தில் தோழர் மா. இராமநாதன் தலைமையில் தி. மு. க. செயற்குழு கூடியது அதுபோது, கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"இவ்வூர் திராவிட முன்னேற்ற கழக முக்கியஸ்தரும் செயற்குழு உறுப்பினருமான தோழர் நா. இராமலிங்கம் வாழ்க்கைத் துணைவியர், வெள்ளையம்மாள், இயற்கை எய்தியதை குறித்து அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் துணைவியரை இழந்து வாடும் தோழருக்கு ஆறுதலும் கூறுகிறோம்" என்று விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

மாணவர்களே! அரசியலிலே ஈடுபடாதே என்பது இந்நாட்டினுடைய பரம்பரை மனப்போக்கு. இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்று இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிற நாடு இது. மக்களுடைய எந்த பருவத்தைக்காட்டிலும் மாணவப் பருவம் ஒன்றுதான் அரசியலைப்பற்றி சிந்திக்க - கருத்துக்கொள்ள தகுதியும், உரிமையும் உள்ளதாகும்.

—சத்தியேந்திரன்

## வேண்டுகோள்!

திராவிட முன்னேற்றக் கழக உட்கிளைகளை ஆங்காங்கு ஆரம்பித்தவுடன் அதன் நிர்வாகஸ்தர்களுடைய விவரங்களை உடனுக்குடன் ஒரு பிரதி "மாலை மணி" அலுவலகத்திற்கும் மற்றொரு பிரதி தலைமை அலுவலகம்; 202, தங்கசாலை வீதி, சென்னை-1. என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். "மானேஜர்"

18. சிவனால் அளிக்கப்பட்ட அக்னிப்பொறிகள் யாவரும் சிறிதும் அணுகாவண்ணம் வெப்பத்துடன் உலகெங்கும் வீசின. வாயுக்கள் உலர்ந்தன, கடல்கள் வரண்டன.

19. வாயு அக்னிப் பொறிகளை தாங்கமுடியாமல் கங்கையில்போட தங்கை சரவணப்பொய்கையில் போட்டுவிட்டாள்.

20. பார்வதிதேவி ஸ்நான அறைக்கு போகும்பொழுது அழுக்கைத் திரட்டி உருசெய்து அவ்வுருவுக்கு உயிர்கொடுத்து வாயலில் காவல் வைக்க, சிவன் அங்குவர உட்செல்ல அனுமதிக்காததால் கோபமடைந்து அவ்வுருவை வாளால் வெட்டிவிட்டார். பிறகு விஷயமறிந்த பார்வதி புத்திர சோகத்தால் புலம்ப, சிவன் தேற்றி வெளியில் வந்து பார்க்க அவ்வுருவின் தலையைக்காணவில்லை. மூன்று உலகில் தேடியும் அகப்படவில்லை. உடனே அங்கொரு யானையின் தலையை வெட்டிவைத்து உயிர் கொடுக்க யானைமுக விநாயகராயிற்று.

"திராவிடநாடு"

## தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

**7—12—50**

**மைலாப்பூர்**

தோழர் இரா. நெடுஞ்செழியன்

**8—12—50**

**அய்யம்பேட்டை (காஞ்சிபுரம்)**

தோழர்கள் சி. என். அண்ணாதுரை, அரங்கண்ணல், தில்லைவில்லாளன்.

**திருவொற்றியூர்**

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன்.

**9—12—50**

**சைதாப்பேட்டை**

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன்.

**10—12—50**

**தூத்துக்குடி**

தோழர் ஈ. வே. கே. சம்பத்.

**திருவாரூர்**

தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், அரங்கண்ணல், என். எஸ். இளங்கோ, ப. உ. சண்முகம், கே. ஆர். செல்லமுத்து.

**மதுராந்தகம்**

தோழர்கள் சி. என். அண்ணாதுரை, தில்லை வில்லாளன், திண்டிவனம் தங்கவேலு. சதுரை அழகரசு.

## முக்கிய அறிவிப்பு

சி. என். ஏ. வின் பேச்சுக்களையும், எழுத்துக்களையும் எமது அனுமதிபெறுமல் கண்டபடியெல்லாம், பலர் பிரசுரிக்கும் வெளியீடுகளைப்பற்றி நமக்கு பல, புகார்கள், வருகின்றன.

சி. என். ஏ. விடமோ அல்லது அலுவலகப் பொருப்பாளரிடமோ அனுமதி கோராது எதுவும் வெளியிடக்கூடாது என்று நாம் பன்முறை தெரிவித்திருந்தும், இந்தப் போக்கு, இன்னும் தொடர்கிறது.

இதனால் பல சங்கடங்களைத் தாங்க வேண்டிய தொல்லைகள், நமக்கு ஏற்படுகின்றன.

எனவே, சி. என். ஏ. தீட்டிய, கட்டுரை, கதைகள், நாடகங்கள் ஆகியவைகளை எடுத்துக் கையாள விரும்புவோரும் அவரது பேச்சுக்களைப் பிரசுரிக்க விரும்புவோரும், அவருடைய அனுமதியைப் பெறுவது மிக முக்கியமாகும். இனிமேற்பட, இதுபோன்ற முறை நீடிக்குமானால், சட்டப்படி நடவடிக்கை எடுக்க நேரும் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நிர்வாகி,
'திராவிடநாடு' அலுவலகம்
காஞ்சி.

## கழக பேச்சாளர்கள்

திராவிட முன்னேற்றக் கழக பேச்சாளர்கள் தங்களுடைய நிகழ்ச்சிகளை அவ்வப்போது "மாலைமணி" அலுவலகத்திற்கு அனுப்பித் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"ஆசிரியர்"

## திராவிடர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் தேசபக்த பெருமக்கள் செய்திருப்பதாகக் கூறப்படும் தீர்மானங்கள் சிலவற்றை மட்டும் இங்கு நேயர்களின் கவனத்துக்கு வைக்கிறோம்.

1. 4-12-50 முதல் 3-1-51 வரை தினந்தோறும், நாள் தவறாமல் தக்க விளம்பரம், ஆரவாரம் முதலியவற்றுடன் திராவிட இயக்கத்தினரைத் தாக்கிப் பேசுதல்.

2. தாக்கிப் பேசுவதென்பது சாதாரண முறையிலன்றி, மிக மிக ஆபாசமான முறையில், திராவிடக் கட்சியினர் கேட்கச் சகிக்காமல் தங்களுடன்வந்து மோதிக் கொள்ளும் அளவுக்குத் தாக்கிப் பேசுவது.

3. திராவிடர்கள் கூட்டம் நடத்தினால், அங்குப் பலராகச் சென்று கூச்சலும் குழப்பமும் விளைவித்துக் கொண்டிருப்பது.

4. திராவிடர்கள் நடத்தும் நாடகங்களுக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு உள்ளே சென்று குழப்பம் உண்டுபண்ணுவது.

5. 3-1-51-க்குள் திராவிடர் இயக்கம் இருந்த இடம் தெரியாமல் போகுமாறு அழித்துவிடுதல்.

6. திராவிடர்கள் வடநாட்டாருக்குக் கறுப்புக் கொடிகள் காட்டினால், அங்குப் பலராகச் சென்று மூவர்ணக் கொடி காட்டி ஆடம்பரமாக வரவேற்றல்.

7. திராவிட இயக்கத் தோழர்களுள் முக்கியமானவர்களை வலியச் சண்டைக்கிழுத்துப் போலீஸ் வரை வலித்து, செல்வாக்கைக் கொண்டு போலீசாரால் அவர்களுக்குத் தொல்லை விளைவித்துக்கொண்டிருக்குமாறு செய்தல்.

8. திராவிடரை எதிர்த்துத் தாக்கிப் பேசும் கூட்டங்களில் நாள்தோறும் விபூதி வீரமுத்துச் சாமியாரைப் பேசவைத்தல், இதற்காக அவரை வரவழைத்து, அவருக்கு வேண்டிய உணவு வகைகளையும், போக்குவரத்து வசதிகளையும் முதல்தரமாகச் செய்தல்.

9. திராவிடர் விஷயத்தில் எவ்வளவு பலாத்காரச் செயல்களில் ஈடுபட முடியுமோ அவ்வளவும் ஈடுபட்டுப் பார்த்துவிடுதல்.

இந்தவகையில் விடாப்பிடியாகப் பிரசாரம்செய்தும், மக்களை மிரட்டியும், அடக்குமுறையைக் கையாண்டும், இன்னும் தங்களுக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் கையாண்டும் திராவிட இயக்கத்தை ஒழித்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் தோழர்கள் கனாக் கண்டிருக்கின்றனர். அவர்களுடைய இக்கனவு உண்மையில் அவர்கள் கண்டுள்ள கனவாயிருப்பின், இது பகற்கனவாகவே முடிவதுடன், இவர்களுடைய அசல் யோக்கியதை என்னவென்பதை உணர்ந்துகொள்ளப் பொதுமக்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்.

## அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பின்பற்றித் திராவிடப் பெண்கள் நன்மைக்கு உழைக்கும் நோக்கத்துடன் திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம் ஒன்று அமைக்க இயக்கப் பிரமுகர்களுடனும் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களுடனும் பெண்கள் இயக்கப் பிரமுகர்களுடனும் கலந்தாலோசித்து ஏற்பாடு செய்துவருகிறோம். இதுவரை நூற்றுக்குமேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். தொடக்க விழாவுக்கான அமைப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் தொடக்க விழா நடைபெற விருப்பதால், இயக்கத்தில் கலந்து தொண்டாற்ற விரும்பும் திராவிடப் பெண்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியிலிருந்து நேரிடையாகவோ ஆள் மூலமாகவோ ஆண்டுக் கட்டணமாகிய நாலணாச் செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

அலமேலு
அமைப்பாளர் தி. மு. கழகம்
தமிழ்மனை
13, அருணாசல ஆச்சாரி தெரு
சேம்பாக்கம், திருவல்லிக்கேணி

## 'ஜிப்ரால்டரைவிட்டு வெளியேறு'

லண்டன், டிஸ. 5—

ஸ்பெயினில் ஸ்தானிகரை நியமிக்கலாமா என்று பிரிட்டன் யோசித்துவரும் சமயத்தில் 'ஜிப்ரால்டரைவிட்டு வெளியேறு'என்று மாட்ரிட் ரேடியோ அறிவித்திருக்கிறது.

இப்போது நவீன யுத்த ஆயுதங்கள் எல்லாம் ஏற்பட்டுவிட்டதால் ஜிப்ரால்டர் முன்புபோல் பாதுகாப்புக்கான கேந்திரஸ்தலமாக இப்பொது இருக்கவில்லை என்றும் இன்று ஜிப்ரால்டர் ஸ்பெயினுக்குட்பட்டதே என்றும் மாட்ரிட் ரேடியோ அறிவித்திருக்கிறது.

இவ்விஷயமாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி பிரிட்டிஷ் அயல் நாட்டிலாகா இன்னும் எதுவும் முடிவு செய்யவில்லை.

1940-ல் பிரான்ஸ் வீழ்ச்சியடைந்த சமயத்தில் ஸ்பெயினின் பிரிட்டிஷ் ஸ்தானீகர் வர விருந்த சமயத்தில் 'ஜிப்ரால்டரைவிட்டு வெளியேறு' என்ற கோரிக்கை எழுந்தது.

மாட்ரிட்டில் பிரிட்டிஷ் ஸ்தானீகராக யாரை நியமிப்பது என்பது விஷயமாக பெவின் இதுவரை முடிவு செய்ததாகத் தெரியவில்லை.

---

லண்டன், டிச. 5—

இப்போதுள்ள திட்டம் நிறைவேறினால் இன்னும் நான்கு வருஷ காலத்தில் பிரிட்டன் முழுவதற்குமே டெலிவிஷன் விஸ்தரிக்கப்பட்டுவிடும் என்று கூறப்படுகிறது. நாடிங்காமிலும் யார்க்ஷயரிலும் புது டெலிவிஷன் ஸெண்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.


## "கிளர்ச்சி"

ஆசிரியர்கள் :

**இரா. சு. தங்கப்பழம்**
**எம். எஸ். சிவசாமி**

**1—1—51 முதல் மீண்டும் வெளிவருகிறது**

நாடெங்கும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

"கிளர்ச்சி" அலுவலகம் தூத்துக்குடி.


## வானொலி

**(7—12—50—வியாழன்)**

சென்னை
மீட்டர் 211·3

**காலை**

| | |
|---|---|
| 7-0 | ஸ்வாகதம் |
| 7-15 | தமிழில் செய்தி |
| 7-30 | பி. சிதம்பரம் பாட்டு |
| 8-0 | ஆங்கிலத்தில் செய்தி |
| 8-15 | ஒலிபரப்பு முடிவு |

**பிற்பகல்**

| | |
|---|---|
| 1-30 | ஆங்கிலத்தில் செய்தி |
| 1-50 | சினிமா பாட்டுகள் |
| 2-0 | தமிழில் செய்தி |
| 4-30 | ஐரோப்பிய சங்கீதம் |
| 5-0 | ஒலிபரப்பு முடிவு |

**மாலை**

| | |
|---|---|
| 5-30 | நாதமுனி பாண்ட் |
| 6-0 | ஆங்கிலத்தில் செய்தி |
| 6-20 | ராஜம் வைத்தியநாதன் பாட்டு |
| 7-0 | கிளாரினெட் அ. . இ. ரே. வித்வான் |
| 7-15 | தமிழில் செய்தி |
| 7-45 | திரைப்பட இசை |
| 8-15 | வைத்தியநாத பாகவதர் பாட்டு |
| 9-30 | மதராஸ் 2-ல் உள்ளபடி |
| 10-0 | ஐரோப்பிய சங்கீதம் |
| 10-30 | ஒலிபரப்பு முடிவு |

---

திருச்சி
மீட்டர் 395·8

**காலை**

| | |
|---|---|
| 7-10 | கீதாரம்பம் |
| 7-15 | தமிழில் செய்தி |
| 8-0 | ஆங்கிலத்தில் செய்தி |
| 8-15 | காலை இசை |
| 8-30 | ஒலிபரப்பு முடிவு |

**பிற்பகல்**

| | |
|---|---|
| 1-15 | பெண்ணுலகம் |
| 1-30 | ஆங்கிலத்தில் செய்தி |
| 1-50 | டி. சௌடையா வயலின் |
| 2-0 | தமிழில் செய்தி |

**மாலை**

| | |
|---|---|
| 5-30 | சாக்ஸபோன் |
| 5-40 | இசைப்பயிற்சி |
| 6-0 | ஆங்கிலத்தில் செய்தி |
| 6-15 | ஆர். கணேசன் பாட்டு |
| 6-30 | கிராம நிகழ்ச்சிகள் |
| 7-15 | தமிழில் செய்தி |
| 7-30 | சித்ர கானம் |
| 8-0 | புத்தக விமர்சனம் |
| 8-15 | மதராசில் உள்ளபடி |
| 9-0 | ஆங்கிலத்தில் செய்தி |
| 9-15 | ஒயில் கும்மி |
| 9-30 | நீங்கள் கேட்டவை |
| 10-0 | ஒலிபரப்பு முடிவு |

## இனி நடப்பவை

ஆற்காடு:—10-12-50 ஞாயிறு மாலை 5-30 மணியளவில் சி. பி. சிற்றரசு, வே. த. ஜெயராமன், ஆர். மணிவண்ணன், ஆர். நடராசன், ப. து. ஆதிகேசவன் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

செட்டித்தெரு நாடார் இல்லத்தில் சி. பி. சிற்றரசு தலைமையில், உறுப்பினர்கள் 'கடமை' என்பது பற்றி விளக்குவார். அனைவரும் வருக.

## கழகத் தோழர்களுக்கு !

திராவிட முன்னேற்ற கழக நிகழ்ச்சிகளையும், ஆங்காங்கு நடைபெறும் கழக கூட்டங்களின் விவரங்களையும் உடனுக்குடன் "மாலை மணி" அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். — ஆசிரியர்


## தேவை

"மாலை மணி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை விவரங்களுக்கு எழுதவும்.

மதுரை
திருச்சி
கும்பகோணம்
மாயவரம்
வேலூர்
திருவண்ணாமலை

**"மாலைமணி" பதிப்பகம்**
மண்ணடி சென்னை—1.



## சந்தா விவரம்

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.



## விளம்பர விகிதம்

அங்கலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

**"மாலைமணி" பதிப்பகம்**
மண்ணடி-சென்னை-1



Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I